Mudumalai Sanctuary

9-30 a.m. *273 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of foreigners who visited Mudumalai Sanctuary during the years 1958–62;

(*b*) the income derived by way of admission fees from the visitors in the years 1958–62; and

(*c*) whether the Government have any proposal to provide more facilities to the visitors?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) to (*c*) A statement [a] is placed on the table of the House.

Sanctuary at Vedaranyam

*274 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to establish a sanctuary at Vedaranyam; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) ஆம். தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் இருக்கும் கொடியக் காடு ஒதுக்கக் காட்டில் (வேதாரணீயம்) வனவிலங்குச் சரணாலயம் ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் உள்ளது.

(இ) மேற்படி பகுதியிலுள்ள சில நிலங்களை கான் துறைக்கு மாற்றும் விஷயம் பரிசீலனையில் இருப்பதால், வனவிலங்குச் சரணாலயம் பற்றிய முழு விவரங்கள் முடிவு செய்யப்படவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : முதுமலை வனவிலங்கு சரணாலயத்தின் நடுவில் ஆதிவாசிகள் நடுக்காட்டில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை அந்தக் காட்டுக்கு வெளியில் கொண்டு வந்து ரீ ஹாபிலிடேட் பண்ணவேண்டுமென்ற யோசனை இருக்கிறதே அதைப்பற்றி முடிவு ஏதாவது செய்யப்பட்டதா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : தனியாகக் கேள்வி போடவேண்டும்.

Coconut cultivation

*275 *Q.*—SRI V. S. S. MANI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the nature of assistance given to persons growing coconut tree with a view to improve the coconut industry, (i) in the State, and (ii) in Madurai district; and

(*b*) the extent of lands under coconut cultivation in Madurai district?

[a] Printed as Appendix II on pages 308-310 infra.

19th November 1963]

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

(அ) & (இ) சபையில் ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. எஸ். எஸ். மணி : தென்னை மரத்திலுள்ள ஒவ்வொரு பாகமும் பயனுள்ளதாகும். அவற்றின் ஒவ்வொரு பாகத்தையும் கொண்டு சிறுசிறு தொழில் செய்ய வாய்ப்பு இருக்கிறது. அத்தகைய தொழில்களை அமைக்க திட்டங்கள் வகுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : தென்னை மரமும், பனை மரமும் எல்லா வகையிலும் பயன்படுகிறது என்பதை அரசாங்கம் நன்றாக உணருகிறது. அதனால்தான் தென்னைக் கன்றுகளை ஆங்காங்கு பயிரிட எல்லா ஏற்பாடுகளும் இப்போது செய்யப்பட்டு வருகிறது. இன்னும் தென்னை, பனை ஆகிய மரங்களின் பாகங்களைக் கொண்டு பல உப தொழில்களை குடிசைத் தொழில் மூலமாக ஏற்படுத்தியும் வருகிறது. இதனால் பல நன்மைகளை ஜனங்கள் அடைந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஒரு தென்னை நாற்று நடுவதற்கு ஏறக்குறைய 25 ரூபாய் வரை செலவு ஆகிறது என்கிற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினருக்குக் கிடைத்திருக்கிற தகவல் முற்றிலும் உண்மைக்கு விரோதமானது.

Rural dispensaries

* 276 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government have any scheme to solve the problem of dearth of qualified medical personnel to man rural dispensaries?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கிராம டிஸ்பென்சரிகளில் பணி புரியும் மருத்துவர்களுக்கு அனுமதிக்கப்படும் உதவித் தொகை விகிதங்களைத் திருத்தி அமைப்பது குறித்து அரசாங்கம் யோசித்து வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : கிராமப்புறங்களில் டாக்டர்கள் போதாமல் இருப்பதற்குக் காரணம் அங்கு அவர்களுக்கு வேண்டிய வீட்டு வசதிகள், இன்னும் இதர வசதிகள் இல்லாமல் இருப்பதுதான். ஆகவே உடனடியாக கிராமப்புறங்களில் உள்ள டாக்டர்களுக்குப் போதுமான எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தக் கேள்வி ரூரல் டிஸ்பென்சரியைப் பொறுத்தது. ரூரல் டிஸ்பென்சரி டாக்டர்கள் தனிப்பட்ட முறையில் வீடுகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

---

[a] Printed as Appendix III on pages 310–313 infra.